# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)

E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **K. விஜயன்** | **S.S. சுப்பிரமணியன்** | **E. அந்தோணி** |


பெறுநர், நாள் : **02/07/2014**

**தலைவர்**
**மற்றும் நிர்வாக இயக்குநர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் விநியோகக்கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002.

அய்யா,

**பொருள் :** **பணியமைப்பு - நிர்வாகம் - மஸ்தூர் (பயிற்சி) - கள உதவியாளர், அலுவலக உதவியாளர் (பயிற்சி) மதிப்பீட்டாளர் 2ம் நிலை (பயிற்சி), உதவிபொறியாளர் (பயிற்சி) ஆகியோரின் தொகுப்பூதிய உயர்வு - நன்றி - ஊதிய உயர்வு ஒப்பந்த நாளிலிருந்து வழங்க கோருதல் சம்மந்தமாக.**

**பார்வை :** 1. (Per) FB TANGEDCO Proceedings No 10, (Administrative Branch) Dated 01.07.2014

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் நீண்ட நாள் கோரிக்கையின் ஒரு பகுதியான பயிற்சியாளர்களின் தொகுப்பூதியத்தை உயர்த்தி தர வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று பயிற்சியாளர்களின் தொகுப்பூதியத்தை உயர்த்தி தந்தமைக்கு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழக மின்வாரியத்தில் பணிக்கு சேர்கின்றவர்கள் பயிற்சி காலமே வேண்டாமென்று மின்ஊழியர் மத்திய அமைப்பு அழுத்தமான கோரிக்கையை வைத்து வாதிட்டது. வாரிய தலைமை கூட இக்கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்த போதிலும் சில புற சூழ்நிலைகளால் பயிற்சியாளர் என்ற பிரிவை தற்போது எடுக்காமல் பயிற்சி காலத்தை குறைத்து வாரியம் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தையொட்டியே உத்தரவு வழங்கியது.

மின்வாரியத்தில் மஸ்தூர், களஉதவியாளர், அலுவலக உதவியாளர், கணக்கீட்டாளர் 2ம்நிலை ஆகியோர்களின் பயிற்சி காலத்தை ஓராண்டாக குறைத்து உத்தரவை வெளியிட்ட போதே பயிற்சியாளர்களுக்கு வழங்கும் தொகுப்பூதியத்தை உயர்த்தி தர வேண்டும் என்றும், ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் போதே மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் தினக்கூலி ரூ. 250/- ஆக உயர்த்தி அளித்ததின் அடிப்படையில் பயிற்சியாளர்களுக்கு வழங்கும் தொகுப்பூதியத்தை குறைந்தபட்சம் ரூபாய் 8000/-ஆக வழங்க வேண்டும் என்று வாதிட்டோம். இவைகளையெல்லாம் கணக்கில் கொண்டு பயிற்சியாளர்களின் தொகுப்பூதியத்தை வாரியம் உயர்த்தி அளித்திருக்கின்றது.

பார்வையில் கண்ட வாரிய குறிப்பாணையில் தொகுப்பூதியம் உயர்த்தப்பட்டதை மட்டுமே குறிப்பிட்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து தொகுப்பூதிய உயர்வு என்பது ஊதிய உயர்வு ஒப்பந்த நாளான குறைந்தபட்சம் 9.1.2014 முதலாவது வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திட விரும்புகின்றோம்.

தங்களது உத்தரவிலேயே கூட தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்கும் போது மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் தினக்கூலி உயர்த்தப்பட்டதை குறிப்பிட்டுள்ளீர்கள் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு ஒப்பந்த தொழிலாளர்களின் கூலி உயர்வும் 09.01.2014 முதல் வழங்கப்பட்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு எங்களின் கோரிக்கைக்கு வலு சேர்க்கின்ற ஒரு நிகழ்வு என்பதை தங்களின் பார்வைக்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

09.01.2014 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற ஊதிய உயர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் எங்களது சங்கத்தின் சார்பாக பயிற்சியாளர்களுக்கு தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கிட கேட்டுக் கொண்டோம். மாண்புமிகு மின்துறை அமைச்சர் எங்களது கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்தார். தாங்களும் ஒப்புக் கொண்டீர்கள் என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

ஊதிய உயர்வு ஒப்பந்தத்தோடு பிறப்பிக்கப்பட்ட அனைத்து உத்தரவுகளும் 09.01.2014 முதல் அமுலுக்கு வரும் என்று குறிப்பிட்டுள்ளதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து பயிற்சியாளரின் தொகுப்பூதிய கோரிக்கையில் தாங்கள் பாரபட்சம் காட்டமாட்டீர்கள் என்பதையும் குறிப்பிட்டு கூற விரும்புகிறோம்.

பயிற்சியாளர்களின் பயிற்சி காலத்தை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களது தொகுப்பூதியத்தை உயர்த்தி தர வேண்டும் என்ற கோரிக்கையும் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையோடு பேசப்பட்டு பயிற்சியாளரின் பயிற்சி காலமும் குறைத்து அது 09.01.2014 முதல் அமுலுக்கு வரும் என்பதை வாரியமே உத்தரவாக பிறப்பித்துள்ளதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து கோரிக்கையின் மறு அம்சமான தொகுப்பூதியத்தை உயர்த்தி தருவது என்பது 09.01.2014 என்று குறிப்பிடுவது தான் சரியான நியாயம் வழங்கியதாக இருக்கும் என்பவைகளை தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்து தொகுப்பூதிய உயர்வு என்பது 09.01.2014 முதல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

எனவே தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து மஸ்தூர் பயிற்சியாளர், களஉதவியாளர், அலுவலக உதவியாளர் (பயிற்சி) கணக்கீட்டாளர் 2ம் நிலை, உதவி பொறியாளர் (பயிற்சி) ஆகியோர்களின் தொகுப்பூதியத்தை ஊதிய உயர்வு ஒப்பந்த நாளான 09.1.2014 அன்று முதல் அமுலுக்கு வரும் என்ற திருத்தத்தை தங்களது பார்வையில் கண்ட உத்தரவில் பிறப்பித்து நியாயம் வழங்கி அப்பகுதி தொழிலாளர்கள் மனநிறைவோடு பணியாற்ற வழிவகை காண வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச்செயலாளர்

நகல் : மின்கதிர்